Registered as a Newspaper · பக்கங்கள் 04 · விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம் 04 · திருவள்ளுவர் ஆண்டு 2024 · ஆடி 28 · [ 12-08-1993 ] · வியாழக்கிழமை · ஓசை 175

## சகல பயிற்சி ஆசிரியர்களுக்கும் வேதன அதிகரிப்பு வழங்க பணிப்பு

கல்வி உயர் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட 35000ம் பயிலுநர் ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட சகல பயிற்சி ஆசிரியர்களுக்கும் சம்பள மாற்றியமைப்புபடி சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். ஏ. பி. முகைதீன் சகல கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை வழங்கி உள்ளார். தற்போது மத்திய கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களில் பயிலுநர் ஆசிரியர்களுக்கு 1400/-ல் இருந்து 1700/-ம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு ரூபா 2050ல் இருந்து ரூபா 2350ம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஒருவர் கைது

(திருமலை)

கடந்த சனியன்று திருக்கோணமலைமாவட்டம் தள்ளி என்ற கிராமத்தை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமகன் ஒருவரை கைதுசெய்து கொண்டு சென்றுள்ளனர்.

காலை 10 மணியளவில் நடைபெற்ற இச்சுற்றிவளைப்பின்போது இப்பகுதியைச் சேர்ந்த மகேஸ் (21) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

# இருபடகுகள் மூழ்கியதில் 19பேர் சாவு;

# கிளாலிக் கடற்பரப்பில் துயரச் சம்பவம்



## கடற் கொந்தளிப்பு காரணம்

(கிளாலி)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரு பயணிகள் படகு மூழ்கியதில் குறைந்தது 19 தமிழ்ப் பொதுமக்கள் பலியாயினர். பலமாக வீசிய காற்றின் காரணமாக எழுந்த கடற் கொந்தளிப்பின் காரணமாகவே இவ்விரு படகுகளும் மூழ்கின.

இதேவேளை மரணமடைந்தவர்களின் 17 சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இச் சம்பவத்தில் பதினொரு பயணிகள் ஆபத்தின்றிக் காப்பாற்றப்பட்டனர்.

மேலும் இத்துயரச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது; அல்லிப்பளையிலிருந்து ஆலங்கேணி நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த இரண்டு படகுகள் நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் காற்றினால் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் கடலில் மூழ்கின.

இரவு 7-30 மணியளவில் புறப்பட்ட இவ் இரு படகுகளில் ஒன்றில் 15 பயணிகளும் 2 ஓட்டிகளும் சென்றுகொண்டிருந்தனர். மற்றைய படகில் 16 பயணிகளும் 2 ஓட்டிகளும் இருந்தனர்.

இப்படகுகள் இரவு 9 மணியளவில் நடுக்கடலில் மூழ்கின. இவ்விபத்தின் போது ஒருபடகிலிருந்த நான்கு ஆண்கள் அப்பகுதியால் சென்றுகொண்டிருந்த பொருள்களை ஏற்றிச் செல்லும் படகினால்காப்பாற்றப்பட்டனர். மற்றைய படகிலிருந்து நான்கு பெண்கள் உட்பட ஏழுபேர் புகையிலைச் சிப்பம் ஏற்றிச் சென்ற படகொன்றினால் காப்பாற்றப் (4ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். ஆஸ்பத்திரிக்கு பதினேழு சடலங்கள்

கிளாலிக் கடலில் இருபடகுகள் கவிழ்ந்து மூச்சுத் திணறிப் பலியான பதினேழு பேரின் சடலங்கள் நேற்று யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டன.

இச் சடலங்களை அடையாளம் காண்பதற்காக நூற்றுக்கணக்கான பொதுமக்கள் யாழ். வைத்தியசாலையை முற்றுகையிட்டவண்ணமிருந்தனர்.

ஆயினும் நேற்று மாலை வரை 16 பேரின் சடலங்களே அடையாளங் காணப்பட்டன.

குழந்தைகள், ஆண்கள், பெண்கள் ஆகிய சகலரின் சடலங்களும் நேற்று அடையாளம் காண்பதற்காக யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

(தி), (பா)

### படகு விபத்தில் பலியான 18 பேரின் விபரம்

(நமது நிருபர்)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு நிகழ்ந்த பயணிகள் படகு விபத்தில் பலியானோரில் 16பேரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன அடையாளம் காணப்பட்டோரது பெயர் விபரங்கள் வருமாறு:

★ பாலகிருஷ்ணன் ராஜேஸ்

★ நடனசிகாமணி ரத்தினேஸ்வரி (60) வல்வெட்டித்துறை.

★ பாலசுப்பிரமணியம் மேகவர்ணன் (47) வல்வெட்டித்துறை.

★ தர்மலிங்கம் கணேசலிங்கம் (59) வல்வெட்டித்துறை.

★ ஐயன் மோதிலால் நேரு (28) யாழ்ப்பாணம்.

★ மோதிலால் நேரு சரோ

### ஒரே குடும்பத்தைச்சேர்ந்த



கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற படகு விபத்தில் பலியான மூவரினதும் மேலும் ஒரு குழந்தையினதும் சடலங்களை மேலுள்ள படங்களில் காணலாம்.

# இம்மாத நடுப்பகுதியில் அமைச்சரவை மாற்றம்

## நிதி அமைச்சர் காமினி?

(கொழும்பு).

இம்மாத நடுப்பகுதியில் அமைச்சரவை மாற்றங்கள் நிகழ இருப்பதாகவும், அடுத்த மாத முற்பகுதியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணையலாம் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா அமைச்சரவையில் நிதியமைச்சராகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் நாட்டின் பாதுகாப்பு நிலை மோசமடைந்து வரும் இந்த நிலையில் காமினி திஸநாயக்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை ஏற்பாரா என்பது பின்பே முடிவு செய்யப்படும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பேச்சாளர் ஒரு

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வேட்பாளராக டி. பி. விஜேதுங்க?

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் டி. பி. விஜேதுங்கவே அபேட்சகராக இருப்பார் என அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ஐ.தே.க. மத்திய குழுவின் விசேட கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''இந்த நாட்டை வழிநடத்திச் செல்லக்கூடிய சக்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கே உண்டு. கட்சியின் செயற்பாடுகள் யாவும் ஜனநாயகத்தன்மை கொண்டவை. இனவாதமும், பிரபுத்துவவாதமும், குடும்ப வாதமும் ஐ.தே.க வில் கிடையாது.

''இந்த நாட்டில் ஐ.தே.க. வுக்கு மாற்றுக் கட்சி கிடையாது. எமக்கு உறுதியான கொள்கை சிறந்த தலைமைத்துவம் உண்டு. தலைமைத்துவத்திற்காக எமது கட்சியில் போட்டி, வேற்றுமை கிடையாது. அடுத்த ஜனாதிபதி, பொதுத்தேர்தல்களுக்கு நாம் இப்பொழுதிருந்தே தயாராக

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆலங்கேணி நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்றுகொண் கடற்கொந்தளிப்பினால் கடலில் மூழ்கின.

# யாழ். ஆஸ்பத்திரிக்கு பதினேழு சடலங்கள்

கிளாலிக் கடலில் இரு படகுகள் கவிழ்ந்து மூச்சுத் திணறிப் பலியான பதினேழு பேரின் சடலங்கள் நேற்று யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டன.

இச் சடலங்களை அடையாளம் காண்பதற்காக நூற்றுக்கணக்கான பொது மக்கள் யாழ். வைத்தியசாலையை முற்றுகையிட்டவண்ணமிருந்தனர்.

ஆயினும் நேற்று மாலை வரை 16 பேரின் சடலங்களே அடையாளங் காணப்பட்டன.

குழந்தைகள், ஆண்கள், பெண்கள் ஆகிய சகலரின் சடலங்களும் நேற்று அடையாளம் காண்பதற்காக யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

(தி), (பா)

# ஒரே குடும்பத்தைச்சேர்ந்த ஐவரும் மூழ்கிப் பலி

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் நேற்று முன்தினம் படகு மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் பலியாகியுள்ளனர்.

கொழும்பில் வாழ்ந்து வந்த இவர்கள் கடந்த 28ஆம் திகதி கிளாலி கடலில் கடற்படையினரின் தாக்குதல் நடைபெற்ற இரவு யாழ்ப்பாணம் வந்தனர்.

சாவகச்சேரியில் உறவினர் வீட்டில் விருந்தினராகத் தங்கியிருந்த இவர்கள் நேற்று முன்தினம் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட போது படகு மூழ்கி குடும்பத்தில் உள்ள ஐவரும் பலியானார்கள். (86)

களும் 2 ஓட்டிகளும் சென்று கொண்டிருந்தனர். மற்றைய படகில் 16 பயணிகளும் 2 ஓட்டிகளும் இருந்தனர்.

இப்படகுகள் இரவு 9 மணியளவில் நடுக்கடலில் மூழ்கின. இவ்விபத்தின் போது ஒருபட செல்லும் படகினால்காப்பாற்றப்பட்டனர். மற்றைய படகிலிருந்து நான்கு பெண்கள் உட்பட ஏழுபேர் புகையிலைச் சிப்பம் ஏற்றிச் சென்ற படகொன்றினால் காப்பாற்றப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# படகு விபத்தில் பலியான 18 பேரின் விபரம்

(நமது நிருபர்)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு நிகழ்ந்த பயணிகள் படகு விபத்தில் பலியானோரில் 16பேரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன அடையாளம் காணப்பட்டோரது பெயர் விபரங்கள் வருமாறு:

★ பாலகிருஷ்ணன் ராஜேஸ்வரி (56) பருத்தித்துறை.
★ பாலகிருஷ்ணன் தமயந்தி (25) பருத்தித்துறை.
★ சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி (39) சாவகச்சேரி.
★ மகேஸ்வரமுர்த்தி மனோராணி (35) சாவகச்சேரி.
★ மகேஸ்வரமூர்த்தி துஷிபா (07) சாவகச்சேரி.
★மகேஸ்வரமூர்த்தி துவேதா (02) சாவகச்சேரி.
★ மகேஸ்வரமூர்த்தி துவசி (02) சாவகச்சேரி.
★ நடனசிகாமணி ரத்தினேஸ்வரி (60) வல்வெட்டித்துறை.
★ பாலசுப்பிரமணியம் மேகவர்ணன் (47) வல்வெட்டித்துறை.
★ தர்மலிங்கம் கணேசலிங்கம் (59) வல்வெட்டித்துறை.
★ ஐயன் மோதிலால் நேரு (28) யாழ்ப்பாணம்.
★ மோதிலால் நேரு சரோஜாதேவி (25) யாழ்ப்பாணம்.
★ விஸ்வநாதன் நல்லம்மா [53) குரும்பசிட்டி.
★ திருமதி குகப்பிரகாசன் (45) குரும்பசிட்டி.
★ தங்கம்மா சுந்தரலிங்கம் (வயது 59) நெல்லியடி.
★ கமலாதேவி ராகவன் (வயது 52)நெல்லியடி.

மேற்படிஇறந்தவர்களின்மரண விசாரணையை மரணவிசா

(4ஆம் பக்கம் பார்க்க)

# படகினுள் வந்த நீரை வெளியேற்ற முடியவில்லை

## விபத்தில் தப்பியவர் தெரிவிப்பு

நாங்கள் பயணம் செய்த படகில் நிரம்பிய தண்ணீரை வெளியேற்ற போதிய வசதிகள் இல்லாததினாலே எமது படகுடன் நாங்கள் கடலில் கவிழ நேரிட்டது.

கிளாலிக் கடலில் கவிழ்ந்து உயிர் தப்பி வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த மாணவி ந. சாந்தமனோகரி வடமராட்சி செய்தியாளருக்கு முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனக்கு கிளாலிப் பயணம் இதுவே முதல் தடவை. வவுனியா பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பு ஒன்றிற்கு சேர்வதற்காக நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கிளாலிப் பகுதியில் இருந்து ஆலங்கேணி நோக்கிப் புறப்பட்டேன். எங்களது படகில் சுமார் இருபது பேரளவில் இருந்தனர். காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்ததினால் எமது படகு மெது மெதுவாகவே நகர்ந்தது. அதே சமயம் கடல் நீர் எமது பட

(3ஆம் பக்கம் பார்க்க)

# நீரால் நிரம்பியிருந்த படகு அலை மோதியதும் கவிழ்ந்தது

## விபத்தில் மனைவியை இழந்தவர் விபரிப்பு

(யாழ்ப்பாணம்)

திடீர் என்று அலை ஒன்று வந்து படகை மூடியது. அப்போது நீரால் நிறைந்த படகு அடுத்தநிமிடம் கடலில் மூழ்கியது.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளாலி கடலில் ஆலங்கேணியை நோக்கிப் பயணம் செய்த ஒருவர் மூழ்கிய படகிலிருந்து தான் தப்பிவந்த அனுபவத்தை விபரித்தார்.

இ. நடனசிகாமணி (63) என்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இவர் தனது மனைவியை இழந்த நிலையில் எமது செய்தியாளரிடம் பேசினார்.

கிளாலியிலிருந்து படகுபுறப்பட்ட போது மூன்று தடவைகள் படகின் இயந்திரம் பழுதடைந்து, திருத்தப்பட்டே பயணம் மேற்கொள்ளப்பட்டது.

### போத்தல் மூலம் நீரை வெளியேற்றினோம்

பலமான காற்று வீசும் வேளைகளில் அலையடித்து படகிற்குள் நீர் நிறையும். இந்த வேளைகளில் சிறிய போத்தல் ஒன்றினால் தேங்கும் நீரை அள்ளி வெளியில் இறைத்தோம். எமதுசெயலையும் மீறி மிக அதிகமாக கடல்

(3ஆம் பக்கம் பார்க்க)

# அல்லிப்பளைக் கரையில் மக்கள் கூட்டம்

(தென்மராட்சி)

அல்லிப்பளை கடற்கரையில் மக்கள் கூட்டம் அலைமோதியது. நேற்றுமுன்தினம் இரவு கிளாலிக் கடற்பரப்பில் மோசமான காலநிலை காரணமாகபடகுகவிழ்ந்ததில்உயிரிழப்புகள் ஏற்பட்டதை அறிந்து. அன்று பயணம் செய்த பயணிகளின் உறவினர்கள் அல்லிப்பளை இறங்குதுறைக்கு படையெடுத்துவந்து தமது உறவினர்களின் பெயர்களைக்கூறி விசாரித்தவண்ணம் இருந்தனர். இதேவேளை அங்குபோகமுடியாதோர் யாழ்., சாவகச்சேரி, பளை ஆகிய மருத்துவ மனைகளில் சென்று விசாரித்தவண்ணம் இருந்தனர். (86)

# பதினொருபேர் உயிர் தப்பினர்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் இருபடகுகள் மூழ்கின. ஒரு படகிலிருந்து நான்கு ஆண்களும், மறு படகிலிருந்து நான்கு பெண்களும், மூன்று ஆண்களும் உயிர் தப்பி கரைசேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(3ஆம் பக்கம் பார்க்க)

# 'ஏசியா வோச்' கோரிக்கை; இந்திய அரசு புறக்கணிப்பு

## அகதிகள் இன்று வருவர்

(சென்னை)

இன்று 1,200 இலங்கை அகதிகள் கப்பல் மூலம் சென்னையிலிருந்து திருமலை நோக்கி புறப்படுகின்றனர். இவ் வேளையில் அகதிகளை திருப்பியனுப்புவதை நிறுத்துமாறு அமெரிக்க மனிதஉரிமை அமைப்பான ஏசியாவோச் அமைப்பு இந்திய அரசை கோரியுள்ளது.

இலங்கை தமிழ் அகதிகள் பலவந்தமாகவே திருப்பியனுப்பப்படுவதாக ஏசியாவோச் குற்றஞ்சாட்டியுள்ளது. இதே வேளை அகதிகள் தாம்இந்திய அதிகாரிகளினதும் பொலிசாரினதும் மிரட்டல்களினாலும், அகதிமுகாம்களுக்கான வசதிகள் குறைக்கப்பட்டதினாலுமே தாயகம் திரும்புவதாக தெரிவித்துள்ளனர். இவர்கள் மனங்குழம்பியநிலையில் தாயகம் திரும்புவதா பி.பி ஸி தெரிவித்தது.

## வரி விளம்பரம்

### தொடர்புகொள்ளவும்

மனையியற் கண்காட்சி எமது நிலையத்தில் நடைபெற இருப்பதனால் பங்குபற்ற விரும்பும் பழைய மாணவர்கள் வெகு விரைவாக வந்து எம்முடன் தொடர்பு கொள்ளவும் என்பதை அறியத் தருகின்றேன். அனிர்ரா பயிற்சி நிலையம் பூநாறி மரத்தடி கொக்குவில்.

(சி/7179)

### தவறிவிட்டது

10 08 93 அன்று கிளாலி இறங்கு துறையில் (புலோப்பளை) மருத்துவப் புத்தகங்கள் உடுப்புகள் அடங்கிய கறுப்புநிறபொதி ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்' சன்மானம் வழங்கப்படும்.

(5666)

### புலமைப்பரிசில் ஆண்டு (5)

வாரந்தோறும் வெளியிடப்படும் புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் 12-08-93 வியாழன் வெளியிடப்படும் விடையளித்து தந்தால் உடன் திருத்திக் கொடுக்கப்படும், எம்மால் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5651)

### தேவை

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு வேலைகட்கு பெண் உதவியாளர் தேவை. புதன், வெள்ளிக்கிழமைகளில் நேரில் தொடர்புகொள்ளவும் மங்களபதி வைத்தியசாலை 415, அரசவீதி, நல்லூர். (5650)

### அப்பியாச புத்தகங்கள் பெறலாம்

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் அதிபர்கள் மூலமாக கல்வித் திணைக்களத்தில் விநியோகம் செய்யப்படுகின்றது பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களுக்குரிய பணத்தை கல்வித் திணைக்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1 ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் II

★ 2. தற்காலிக உதவி விரிவுரையாளர் -

கிறிஸ்தவ நாகரிகம், நாடகமும் அரங்குக் கலைகளும், நுண்கலை, பொருளியல், அரசறிவியல், மெய்யியல் இந்து நாகரிகம், சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், வியாபார நிருவாகம், வர்த்தகம், சித்த மருத்துவம்,

ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம் / வாய்ப்பாட்டு

ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம் / வாத்தியங்கள்- வீணை / வயலின் / மிருதங்கம்

ஆற்றுகைக்கலை - கர்நாடக சங்கீதம் / பண்ணிசை

ஆற்றுகைக்கலை - (நடனம்) பரதநாட்டியம்

★ ''தேவையான பட்டபின் படிப்புத்தகைமைகளை கொண்டுள்ளவர்கள் தற்காலிக சிரேட்ட விரிவுரையாளர் பதவிக்கு பரிசீலிக்கப்படுவர்''

3. தற்காலிக கட்டுரை ஆசிரியர்
வரலாறு, புவியியல்

4. தற்காலிக செய்முறை காட்டுநர்
சித்தமருத்துவம்

5. தற்காலிக போதனாசிரியர் -
ஆங்கிலம் தரம் II, பரதநாட்டியம், மிருதங்கம், கர்நாடக சங்கீதம் - வாய்ப்பாட்டு, வீணை

6. இடைவரவு விரிவுரையாளர்-
வர்த்தக கைத்தொழிற்சட்டம்/சட்டச்சூழல் கணக்கியல்/கணக்காய்வு/வரிவிதிப்பு/வங்கியியல்/ சமூகவியல்/ அரசறிவியல்

நாடகமும் அரங்குக்கலைகளும்-
அரங்க வரலாறு தயாரிப்புமுறை/நடிப்புக் கொள்கை/இந்திய அரங்கு ஆகியன கற்பித்தற்கு

சித்தமருத்துவம்-
உயர்நிலைத் தமிழ் கற்பித்தற்கு

கட்டிடக்கலை / சிற்பக்கலை / ஓவியம் தீட்டுதல்
அரங்குக்கான ஆக்க இசை, இசைத் தயாரிப்புகள்
தொலை நுகர்வு
பிரான்சிய மொழி
சமஸ்கிருதம்

மெய்யியல் - சமூக உளவியல்/ கிரேக்க, மத்தியகால மெய்யியல் ஆகியன கற்பித்தற்கு

தொடர்புப்படிப்புக்கள்

கிறிஸ்தவ நாகரிகம் - பழைய ஏற்பாட்டியல் / புதிய ஏற்பாட்டியல் இலங்கை திருச்சபை வரலாறு / கிறிஸ்தவ மெய்யியல் /கிறிஸ்தவ வழிபாட்டியல் ஆகியன கற்பித்தற்கு.

7. இடைவரவுப்போதனாசிரியர்-
கர்நாடகசங்கீதம்(வாய்ப்பாட்டு)/பண்ணிசை/வயலின்/ வீணை

சம்பள அளவுத்திட்டம்:-
ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 11 -
ரூபா 4,550 - 10X130
5,850/- (மாதமொன்றுக்கு)

தற்போதைய சம்பளப்படி:
ரூபா 4025/ (மாதமொன்றுக்கு)

இத்துடன் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 10,000/- ரூபா புத்தகப்படி செலுத்தப்படும் இப் படியானது ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப்பணமாகச் செலுத்தப்படும்.

1994-01-01 தொடக்கம் செலுத்தப்படும் படி ஆண்டுக்கு 10,000/ ரூபாவும் அதிதுடன் ஆண்டுச் சம்பளத்தினதும் நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்று

## வீரவணக்க கூட்டம்

7 ஆம், 8 ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த வடமராட்சிக் கோட்டத்தின் பருத்தித்துறை வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீர வணக்கக் கூட்டம் இன்று இரவு 8-00 மணிக்கு அல்வாய் மேற்கு மடத்துவாசல் பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் உரையாற்ற விருக்கும் இவ் வீரவணக்கக் கூட்ட முடிவில், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (90)

★

வவுனியா கோட்டத்தில் ஆகஸ்டமாதத்தில் வீரச்சாவைதழுவிய 16 மாவீரர்களின் நினைவுக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதி கொந்தக்காரன் குளத்திலும் 29 ஆம் திகதி மடுக்குளத்திலும் கூட்டங்கள் நடைபெறும். கூட்டங்களை அடுத்து கலை நிகழ்வுகள் நடைபெறும்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
4-10-1970

தாயக மண்ணில்:
12-8-1992

வீரவேங்கை

### லெப். அறிவுமணி (மைக்கல்)

(சுப்பிரமணியம் துஷ்யந்தன்)

தாயை இழந்தோம்
தந்தையையும் இழந்தோம்
தயவாய் இருந்த உம்மையும் இழந்தோம்
ஆனாலும் அது ஈழ மண்ணிற்காக
என்றும் எமது கண்ணீர்ப் பூக்கள்
உமக்கு காணிக்கையாகும்.

நிரந்தர முகவரி:
கனால் வீதி,
மாதகல்.
தற்காலிக முகவரி:
வளன்புரம்,
கொழும்புத்துறை.

உமது பிரிவால் துயருறும்
சகோதரி (கொன்சி)
அன்ரிமார், அங்கிள்மார்,
மாமா, மாமி,
சித்தி, சித்தப்பா.

(சி-7170)

## நீங்காத இரண்டாம் ஆண்டு நினைவில்



பிறப்பு:
10. 11. 1973

## மட்கல உற்பத்தியாளர்களுக்கு

யாழ். குடாநாட்டில் இன்று எதிர்நோக்கப்பட்டு பாரிய விறகுப் பிரச்சினைகளை சமாளிக்குமுகமாக யாழ் குடாநாடெங்கும் பரவலாகவும், விரைவாகவும் இரட்டைச் சூட்டடுப்புகளை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எனவே இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ள மட்கல உற்பத்தியாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

சக்திப்பகுதி,
த.பொ.மே. கழகம்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.

(சி-7176)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-12

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது படுகொலை செய்யப்பட்ட 06 தமிழர்கள்

1985ஆம் ஆண்டு திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போதுவீரச்சாவெய்திய-

★ **ஈசி** (பொன்னுத்துரை நவரட்ணராஜா - மேன்காமம் மூதூர்-திருமலை)

1986ஆம் ஆண்டு மட்டு-செங்கலடி கொம்மாந்துறையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சுகு** (சீனித்தம்பி சுகுமார் - கொம்மாந்துறை, செங்கலடி மட்டு)

**குமார்** (—சாந்தகுமார் - கொம்மாந்துறை, செங்கலடி மட்டு)

1989ஆம் ஆண்டு முல்லைத்தீவு - பழம்பாசிப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் தீப்** (விசுவலிங்கம் வேதீஸ்வரன் - திரியாய்-திருமலை)

**கீரன்** (வன்னியசிங்கம் உமாசங்கர் - குமுழமுனை- மணலாறு)

முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்.

**கப்டன் தினேஷ்** (மரியஞானேந்திரன் தம்பிநாயகம் தமிழ்ச்செல்வன்- உருத்திரபுரம் கிளிநொச்சி)

சண்டிலிப்பாயில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மாகியப்பிட்டியைச் சேர்ந்த தமிழிளைஞன். வினானில் சுட்டுக்கொல்லப்பட்ட சங்கானை மேற்கைச்சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கொண்டல் கட்டையைச்சேர்ந்த தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு அம்பாறை - நிந்தவூர்ப் பகுதியில் ஜிகாத் குழுவினரால் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

**பிலிப் / திலிப்** (— — பொத்துவில் - அம்பாறை)

**சந்துரு** (— நிந்தவூர் - அம்பாறை)

யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**சேவியர்** (யூலியஸ் டயனஸ் யோகரட்ணம் - பனங்கட்டிக்கொட்டு-மன்னார்)

அம்பாறையில் இனம்தெரியாத குழுவொன்றினால் கடத்திச்செல்லப்பட்டு காணாமல்போன மத்தியமுகாம்

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு வேலைகட்கு பெண் உதவியாளர் தேவை. புதன், வெள்ளிக்கிழமைகளில் நேரில் தொடர்பு கொள்ளவும். மங்கைபதி வைத்தியசாலை 415, அரசவீதி, நல்லூர். (5650)

## அப்பியாச புத்தகங்கள் பெறலாம்

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் அதிபர்கள் மூலமாக கல்வித் திணைக்களத்தில் விநியோகம் செய்யப்படுகின்றது பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்களுக்குரிய பணத்தை கல்வித் திணைக்களத்தில் நேரடியாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

## பாடுமீன் வெற்றியீட்டியது

யாழ் அடைக்கல மாதா விளையாட்டுக் கழகம் கழகங்களுக்கிடையே நடாத்தும் ஒன்பது பேர்கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் (8. 8 93) யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் ஏ அணி றோயல் அணியை 4-0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து இறுதிப்போட்டியில் கலந்து கொள்ள தெரிவாகி உள்ளது. [17]

## ஓய்வுபெற்றோர் நியமனம் பெறுவது தடைசெய்யப்படும்

இளைப்பாறும் அரச ஊழியர் மீளவும் ஒப்பந்த அடிப்படையில் அரச சேவையில் இணைந்து கடமையாற்றுவது 31. 12 93ல் இருந்து முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது இது தொடர்பான விண்ணப்பப்படிவம் எதனையும் பொதுநிர்வாக அமைச்சுக்கோ அல்லது மாகாணசபைகளுக்கோ அனுப்பி வைக்கக் கூடாது என பொதுநிர்வாக மாகாணசபைகள் அமைச்சின் செயலாளர் திரு எம். என். ஜுனைட் சகல அமைச்சின் செயலாளருக்கும் மாவட்ட கோட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இளைப்பாறுவதன் மூலம் வெற்றிடமாக ஏற்படக்கூடிய இடங்களுக்கு தற்போதுள்ளவர்களை இப்பதவிகளுக்கு பயிற்சி கொடுத்து பதவி உயர்வு வழங்கி நியமிக்கவும், மேலும் இப்பதவிகளுக்கு புதிய நியமனங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் இவர்களை இவர் பணித்துள்ளார். (17)

தொடர்புப்படிப்புக்கள்
கிறிஸ்தவ நாகரிகம் - பழைய ஏற்பாட்டியல் / புதிய ஏற்பாட்டியல் இலங்கை திருச்சபை வரலாறு / கிறிஸ்தவ மெய்யியல் / கிறிஸ்தவ வழிபாட்டியல் ஆகியன கற்பித்தற்கு.

7. இடைவரவுப்போதனாசிரியர்-
கர்நாடகசங்கீதம் (வாய்ப்பாட்டு) / வண்ணிசை / வயலின் / வீணை

சம்பள அளவுத்திட்டம்:-
ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம் 11 -
ரூபா 4,550 - 10X130
5,850/- (மாதமொன்றுக்கு)

தற்போதைய சம்பளப்படி:
ரூபா 4025/ (மாதமொன்றுக்கு)

இத்துடன் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 10,000/- ரூபா புத்தகப்படி செலுத்தப்படும் இப் படியானது ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப்பணமாகச் செலுத்தப்படும்.

1994-01-01 தொடக்கம் செலுத்தப்படும் படி ஆண்டுக்கு 10,000/ ரூபாவும் அத்துடன் ஆண்டுச் சம்பளத்தினதும் நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான படியினதும் 10 சதவீதமாகும்.

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
-1993.12 31 திகதி வரை
ரூபா 4,485/- (நிலையானது)
மாதமொன்றுக்கு
- 1994 01 01-ல் இருந்து
ரூபா 5,070/-(நிலையானது)
மாதமொன்றுக்கு

தற்காலிக போதனாசிரியர் தரம் ii (ஆங்கிலத்தில்)
-1993. 12. 31 ஆம் திகதி வரை
ரூபா 4,025/- (நிலையானது)
மாதமொன்றுக்கு
1994 01 01இல் இருந்து
ரூபா 4,550/- (நிலையானது)
மாதமொன்றுக்கு

தற்காலிக கட்டுரை ஆசிரியர்
தற்காலிக செய்முறை காட்டுநர்-
1993 12. 31ஆம் திகதி வரை
ரூபா 3, 737 50 (நிலையானது)
மாதமொன்றுக்கு
1994 01 01இல் இருந்து
ரூபா 4, 225/- (நிலையானது)
மாதமொன்றுக்கு

தற்காலிக போதனாசிரியர்-
ரூபா 3. 900/- (நிலையானது)
மாதமொன்றுக்கு ஆயினும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பணிப்புரை கிடைக்கும் வரைரூபா3,540/-(நிலையானது) மாதமொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

இடைவரவு விரிவுரையாளர்-
மணித்தியாலயத்திற்குரூபா150/-

இடைவரவு போதனாசிரியர்-
மணித்தியாலயத்திற்கு ரூபா 75/-

குறிப்பு:-
1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551ஆம் இலக்க 1992 திசம்பர் 28ஆம் திகதி சுற்றுநிருபத்திற்கு ஏற்ப ஆங்கிலத்தில் போதனாசிரியர் தரம 1 பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் 1994 சனவரி 1ஆம் திகதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்
2. இத்துடன் 1994 திசம்பர் 31ஆம் திகதிவரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் நிரந்தர. தற்காலிக பணியாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.
3. 9 / 93ஆம் இலக்க 1993 05-12 / பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின்படி மாதாந்தப் படியாக ரூபா 600/- கொடுப்பனவு செய்யப்படும்.

ஆங்கில போதனாசிரியர் தரம் ii க்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1993-09-17 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 1993-09-10.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் நிதிக்கிளையில் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளை, அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/ ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23×10 ச. மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆங்கிலப் போதனாசிரியர் தரம் ii பதவிக்குத் தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும், அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993 08 09

— பதிவாளர்

[சி-7181]

---

மாதகல்.
தற்காலிக முகவரி;
வளன்புரம்,
கொழும்புத்துறை.

அன்ரிமார், அங்கிள்மார்,
மாமா, மாமி,
சித்தி, சித்தப்பா.

(சி-7170)

---

# நீங்காத இரண்டாம் ஆண்டு நினைவில்



பிறப்பு:
10. 11. 1973

வீரச்சாவு:
05. 08. 199[illegible]

## லெப். நித்தி
[கிருஸ்ணபிள்ளை தவரத்தினம்]
திதி: 12 - 08 - 199[illegible]

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
நீங்காது உன் நினைவுகள்
ஏங்கிய விழிகளில் நீரை சொரிந்து - நீ
தாங்கிய கனவினை சுமந்து வாழ்கின்றோம்.

நித்தி வீதி,
கரம்பைக்குறிச்சி,
வரணி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(5666)

---

முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்.
**கப்டன் தினேஷ்** (மரியஞானேந்திரன் தம்பிநாயகம் தமிழ்ச்செல்வன்- உருத்திரபுரம் கிளிநொச்சி)

சண்டிலிப்பாயில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட மாகியப்பிட்டியைச் சேர்ந்த தமிழிளைஞன். விளானில் சுட்டுக்கொல்லப்பட்ட சங்கானை மேற்கைச்சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கொண்டல் கட்டையைச்சேர்ந்த தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு அம்பாறை - நிந்தவூர்ப் பகுதியில் ஜிகாத் குழுவினரால் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-
**பிலிப் / திலிப்** (— — பொத்துவில் - அம்பாறை)
**சந்துரு** (— நிந்தவூர் - அம்பாறை)

யாழ்-கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-
**சேவியர்** (யூலியஸ் டயனஸ் யோகரட்ணம் - பனங்கட்டிக்கொட்டு-மன்னார்)

அம்பாறையில் இனம்தெரியாத குழுவொன்றினால் கடத்திச்செல்லப்பட்டு காணாமல்போன மத்தியமுகாம் 4ஆம் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டு மாவட்டத்தில் இனம்தெரியாத குழுவொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்ட களுவங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். தன்னாமுனை. வந்தாறுமூலை. மாவடிவேம்பு, எல்லைநகர்பகுதி. ஏறாவூர். சம்மாந்துறை மற்றும் பல பகுதிகளில் இதே தினத்திலிருந்து இருநாட்களாக சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட 82க்கு மேற்பட்ட தமிழர்கள். துறைநீலாவணைப் பகுதியில் ஜிகாத் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டு ரயர் போட்டு எரிக்கப்பட்ட ஐந்து இளைஞர்கள் உட்பட 60 தமிழர்கள். ஏறாவூர் மருத்துவ மனையில் சிறிலங்கா இராணுவத்தினரால வெட்டிக் கொலை செய்யப்பட்ட 08 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு அம்பாறை - மத்தியமுகாம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-
**2-ம் லெப். விவேக்** (உதயகுமார் - - 3-ம்குறிச்சி, பெரிய கல்லாறு - மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
**தினேஷ்** (இராசதுரை ரவீந்திரமோகன் - கற்கோவளம் - பருத்தித்துறை)

1992ஆம் ஆண்டு 20. 05 1992 அன்று யாழ்-தெல்லிப்பழையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சைபெற்று வரும் போது வீரச்சாவெய்திய-
**தங்கம்** (காளிமுத்து ரஞ்சன் - புல்லுமோட்டை-திருமலை)

கிளி - ஆனையிறவு - நித்தியவெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
**லெப். காளிதாஸ்/காளி** (வன்னியசிங்கம் சற்குணராசா - 2-ம்வட்டாரம், குச்சவெளி - திருமலை)
**கப்டன் சுபாஸ்கர்** (சோமசுந்தரம் சக்திவேல் - செம்மலை, அளம்பில் - மணலாறு)
**லெப். அறிவுமணி/மைக்கல்** (சுப்பிரமணியம் துஷ்யந்தன் - மாதகல் - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7178)

நல்லூர் இனை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நீ கழுதை என்று மூன்று பேர் சொன்னால்
கடிவாளம் பூட்டிக் கொள்வது நல்லது
- ஸ்பானிய பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# இராணுவத்தின் தலையில் தோல்வியின் சுமைகள்

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சி சிறிலங்காவின் முப்படைகளின் தளபதியும், ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்காவிற்குக் கடும் கோபத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற உயர் இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் ''உயர் அதிகாரிகள் தமது பணிகளைச் சரியாகச் செய்ய வேண்டும் அல்லது அதற்கான பிரதிபலனை எதிர்நோக்க வேண்டிவரும்'' என எச்சரித்துள்ளார்.

அத்தோடு, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஆத்திரத்தின் உச்சத்திலேயே இருந்தார் என்பதற்கு அவர் இராணுவத்தின் போர் யுக்தி எவ்வாறு இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டதே சிறந்த சான்றாகும். 'படைகள் இரவில் உறங்கி பகலில் ரோந்து செல்வதை விடுத்து பகலில் உறங்கி இரவில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்'' என அறிவுரை வழங்கியுள்ளார். ஜனாதிபதியின் யோசனையின்படி இராணுவம் தனது யுக்திகளை மாற்றினால் புலிகள் பகலில் தாக்குதல் நடத்தினால் என்னசெய்வது? இதைக் கூட ஜனாதிபதி சிந்திக்காத அளவில் ஆத்திரம் அவரது அறிவை மறைத்தது.

டி. பி. விஜேதுங்காவின் ஆத்திரம் ஒருபுறம் இருக்கட்டும், மண்கிண்டி மலையில் ஏற்பட்ட தோல்விக்கு யார் காரணம் என்பதில் இராணுவதளபதிகள் மட்டத்தில் பரஸ்பரக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத் தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா வீழ்ச்சி கண்ட இராணுவமுகாம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை என ஒரு குற்றச்சாட்டை மறைமுகமாக இராணுவத்தளபதி மீது சுமத்தினார்.

இதனால் ஆத்திரமடைந்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா இவ் விடயத்தில் தனக்கு பங்கில்லை எனவும், கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகமே பொறுப்பு எனவும் தன்னிடம் அதிகாரம் இல்லைஎனவும்தெரி

# ஆட்சி கவிழ்க்கப்பட்டால் சந்திரிகா எதிர்த்து போராடுவாராம்

(கொழும்பு)

ஐ. தே. க. வும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைவதன் மூலம் தனது மேல்மாகாணசபை ஆட்சி கவிழக்கூடிய நிலைக்கு எதிராகத் தாம் தொடர்ந்து போராடப் போவதாக மேல் மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

லங்காதீப சிங்கள தினசரிக்கு அவர் அளித்த பேட்டியில் ஐ தே க. - ஜ ஐ தே. மு. கட்சிகளின் இணைவு தவிர்க்க முடியாதது. ஆனால் ஜ. ஐ. தே மு. கட்சிக்காக தேர்தலில் வாக்களித்த மக்கள் இந்த இணைவை ஏற்கமாட்டார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐ தே. கவும் ஜ ஐ தே. முவும் தமது செல்வாக்கு குறித்து மேல் மாகாணசபையில் மற்றுமொரு தேர்தலில் நிரூபிக்க முடியுமா என்றும் சந்திரிகாகுமாரணதுங்க சவால் விடுத்துள்ளார்.

## திட்டமிடல் மீளாய்வுக்கு அதிபர்களை நியமிக்கத்தடை

திட்டமிடல் மீளாய்வுப் பிரிவுக்கு அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்கக் கூடாது எனவும் அவ்வாறு இவர்கள் நியமிக்கப்பட்டு இருந்தால் உடனடியாக அவர்களை பாடசாலைக்கு அதிபர்களாக அனுப்பி வைக்குமாறும் இவர்களுடைய இடத்துக்கு உதவி ஆசிரியர்களே திட்டமிடல் பிரிவுக்குரிய உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட வேண்டும் என வடக்குக் கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலாளர் திரு. எம் ஏ. சி. முகைதீன் சகல மாவட்ட கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர்கள் இச் சேவைக்கு நியமிக்கப்படக் கூடாது எனவும் அவ்வாறு தொடர்ந்தும் நியமிக்கப்படும் பட்சத்தில் அவர்களைத் தொடர்ந்து இப்பதவிக்கு வைத்திருக்கும் உத்தியோகத்தருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ் உத்தியோகத்தரிடம் இருந்தே இவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் அறவிடப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (17)

## கம்பெனி நிர்வாகத்தின் கீழ் தொழிலாளர் சலுகைகள் பறிப்பு

(கொழும்பு)

தோட்டங்கள கம்பெனிகளிடம் வழங்கப்பட்ட பின்னர் தொழிலாளர்கள் அனுபவித்து வந்த சலுகைகள் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் தோட்டத் தொழிலாளர்கள் ஆடி 18 பண்டிகையை கொண்டாடுவதற்கு வசதியாக பிற்பகல் 2 மணி முதல் விசேட லீவு வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் இம்முறை இத்தகைய பண்டிகைகளுக்கு எல்லாம் லீவு வழங்க முடியாது எனவும், வீட்டிலிருந்துகொண்டாடலாம் எனத் தெரிவித்த நிர்வாகங்கள் அன்று வேலை வழங்க மறுப்பு தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

இதேபோல் இன்றும் தொழிலாளர்கள் அனுபவித்து வந்த பல சலுகைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## பதவி ஏற்காதோரின் நியமனங்கள் ரத்து

01.06 93வரை தமது நியமனத்தை பொறுப்பேற்காத ஆசிரியர்களின் நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரும் கல்விச் சேவைக் குழுத் தலைவருமாகிய ஏ. எஸ். வீரரத்ன சகல மாகாண, மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

1993-ம் ஆண்டிலிருந்து புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் உட்பட சகல வகை ஆசிரியர்களையும் இது உள்ளடக்கும் எனவும், விசேட காரணங்களினால் இவ்வாறு இவர்கள் கடமையேற்காவிட்டால் அதன் விபரங்களை தமக்கு உடன் தெரிவிக்குமாறும் இவர் மேலும் பணித்துள்ளர் (17)

## பிரிவுபசார வைபவம்

(வடமராட்சி கிழக்கு)

தாளையடி பங்குத் தந்தையாக கடமையாற்றி பாஷையூர் பங்குத் தந்தையாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் அருட்திரு எம். டேவிட் அடிகளாருக்கு வடமராட்சி கிழக்கிலுள்ள பொது நிறுவனங்களும் மற்றும் அப்பகுதியில் சேவையாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து பிரிவுபசார வைபவம் ஒன்றை அளித்தனர்

அண்மையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பேசிய பலரும், வறிய மாணவர்களின் கல்வியிலும், இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவையாற்றுவதிலும் அடிகளார் வகித்த பங்கினைப் பாராட்டினர். (36)

## கணிதபாட செயலமர்வு

யா/மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் கணிதபாட விசேட செயலமர்வு இடம்பெற்றது. மல்லாகம் கொத்தணி அதிபர் ஆ. கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்விற்கு கணித விஞ்ஞான மூலவள நிலையம் ஊக்கமளித்திருந்ததும், இதுவே யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற கணித பாடத்திற்கான முதலாவது செயலமர்வு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# வானொலி, தொலைக்காட்சியில் பிரதமர் ரணிலுக்கு முதலிடம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், ரூபவாஹினியும் பிரதமர் ரணில் விக்கரமசிங்கவைப்பிரபல்யப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக லக்திவ' சிங்களப் பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

அப்பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியில் மேலும் டி பி. விஜேதுங்க ஜனாதிபதி பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் ஓரளவுக்கு இலங்கிய நிலை காணப்பட்டது. ஆனால் பிரேமதாசாவின் காலத்திற்கு ஆயத்தம் செய்வதாக கிடைக்கப் பெற்ற புதிய அறிக்கைகளின்படி பார்த்தால் பிரேமதாசாவின் இடத்தை இப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெற்றிருப்பதாகவே தோன்றுகின்றது பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது செயற்பட்டு வந்த உயர் ஒன்றியம் பின்னர் தனதுசெயற்பாட்டை நிறுத்தியிருந்ததாயினும் இப்போது மீண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்தி தமது செயற்பாட்டை மீளத் தொடங்கியுள்ளது. இவ் உயர் ஒன்றியத்தின் பொறுப்பாளராக ஹெட்டியாராச்சி செயற்படுகின்றார்.

மேலும் ஜனாதிபதி ஒன்றியம் என்று கருதப்பட்ட ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கமெராக் குழு மூன்றையும் தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் அமைச்சர் லொக்கு பண்டாரவிடமும் ஒப்படைக்கப்படுவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இனிவரும் தேர்தலின் பிரசாரத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வானொலி மற்றும் ரூபவாஹினி என்பவற்றுடன் தனது சகோதரரான சான் விக்கிரமசிங்கவிற்குரிய ரீ. என். எல் தொலைக்காட்சி சேவையையும் பயன்படுத்தக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய அரசு என்ற பேச்சிற்கு இடமில்லை

– சிறிசேனகுரே

தேசிய அரசாங்கம் என்ற பேச்சுக்கு இடமில்லை. ஆனால் ஐ தே கவுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கூட்டுச் சேரக் கூடும் என்று ஐ. தே. கவின் பொதுச்செயலாளரும் வீடமைப்பு ராஜாங்க அமைச்சருமான சிறிசேன குரே தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் இரு தலைவர்கள் ஐ தே. கவின் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு நியமனம் பெறலாம் என்றும், அமைச்சர்பதவிவழங்கப்படலாம் என்றும் கூறப்படுவது பற்றி கேட்கப்பட்டபோது அவ்வாறான உடன்பாடு எதுவும் இதுவரை எட்டப்படவில்லை என்றும் அமைச்சர் பதிலளித்துள்ளார்.

## பொருண்மிய வளம் காண பெருந்திரளில் மக்கள் வருகை

சிறிலங்கா அரசினால் எம் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையினை இங்கு கிடைக்கின்ற மூல வளங்களைக் கொண்டு எமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்வதன் மூலம் உடைத்தெறியலாம் என்ற நம்பிக்கை உணர்வை மக்கள் மத்தியில் வலுவடையச் செய்யக் கூடியவாறான காட்சிகளைக் கொண்ட கண்காட்சி ஒன்றினை நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடாத்தி வருகிறது.

இக்கண்காட்சி நிகழ்வானது நாம் கையாள வேண்டிய புதிய யுக்திகளை விவசாயம் சக்தி, உட்கட்டுமானம் கடல் வளம், விலங்கு வேளாண்மை, வர்த்தகம், கிராமிய உற்பத்திக்குழு கைத்தொழில், பனை தென்னை வளம், உணவு பதனிடல் என பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு புள்ளி விபரத் தரவுகளுடனும் படங்களுடனும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் விளக்கமளிக்கும் நோக்குடன் தொலைக்காட்சி மூலம் குறும்படங்களும் காட்டப்பட்டு வருகின்றன.

பழநி, ராணிப்பேட்டை

## தேர்தல்களை நடத்துப்படி தேர்தல் ஆணையகத்தைப் பணிக்கவும்

படகினுள்
கிற்குள் வந்து சேர்ந்தவண்ணமிருந்தது.
படகில் நீர் நிரம்பியது

என்றார்.

இதே படகில் பயணம் செய்து தப்பிவந்த தாளையடியைச் சேர்ந்த செல்வி எஸ். அமுதினி எமது தென்மராட்சி

கடல் நீரில்மூழ்கி நீச்சலடித்து சிலயார் தூரத்திலிருந்து பார்த்தபோது கவிழ்ந்த படகிற்குள் பலர்சிக்குண்டது தெரிந்தது. நானும், என்னைப்

தனது யுக்திகளை மாற்றினால் புலிகள் ... தாக்குதல் நடத்தினால் என்னசெய்வது? இதைக் கூட ஜனாதிபதி சிந்திக்காத அளவில் ஆத்திரம் அவரது அறிவை மறைத்தது.

டி. பி. விஜேதுங்காவின் ஆத்திரம் ஒருபுறம் இருக்கட்டும், மண்கிண்டி மலையில் ஏற்பட்ட தோல்விக்கு யார் காரணம் என்பதில் இராணுவதளபதிகள் மட்டத்தில் பரஸ்பரக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத் தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா வீழ்ச்சி கண்ட இராணுவமுகாம் சரியான முறையில் அமைக்கப்பட வில்லை என ஒரு குற்றச்சாட்டை மறைமுகமாக இராணுவத்தளபதி மீது சுமத்தினார்.

இதனால் ஆத்திரமடைந்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா இவ் விடயத்தில் தனக்கு பங்கில்லை எனவும், கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகமே பொறுப்பு எனவும் தன்னிடம் அதிகாரம் இல்லையெனவும்தெரிவித்ததோடு, வெற்றியென்றால் தனது வெற்றி என எடுத்துக்கொள்ளும் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் தோல்வி ஏற்படும்போது அதனை இராணுவத்திடம் தள்ளிவிடுவதாகவும் நேரடியாகக் குற்றம் சாட்டினார்.

ஆனால், இதில் அரசியல்வாதிகள் இராணுவத்தின் மீது பழியைப் போடுவதினாலும், இராணுவத் தளபதிகள் ஒருவர் மீது ஒருவர் பழியைப் போடுவதினாலும் ஏதும் பயன் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஏனெனில் ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை இராணுவத்தால் அடக்கிவிட முடியாது என்பதற்கு உலகில் பல உதாரணங்கள் உண்டு. அதிலும் இலட்சியப் பற்றும், போராடும் திறனும் கொண்ட விடுதலைப் புலிகள் தலைமை தாங்கும் ஒரு போராட்டத்தை ஒடுக்கி விடுவதென்பது இலகுவான தொன்றல்ல. இந் நிலையில் சிறிலங்கா இராணுவம் இறுதியில தோல்வியைத் தழுவுமென்பதும் அதற்கான பொறுப்பை இராணுவத் தலைமையே ஏற்க வேண்டிவரும் என்பதிலும் கருத்து வேறுபாடு கொள்ளத் தேவையில்லை.

இதற்கு இலங்கையில் அடைந்த முழுத்தோல்விக்குமான பழியையும் இந்திய இராணுவமே ஏற்க வேண்டி வந்தமை சிறப்பான உதாரணமாகக் காட்டக் கூடியதாகும். இந்திய அரசியல் வாதிகளினதும், புலனாய்வுத் துறையினதும் முடிவுகளின்படி, ஏன் போரிடுகின்றோம் எனக் கூடச் சரியாகத் தெரியாமல் போரிட்ட இந்திய இராணுவம், இறுதியில் தோல்வி ஏற்பட்ட போது முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டி வந்தது. இதனால் இந்தியில் இராணுவத் தளபதிகளுக்கு இடையிலேயே முரண்பாடுகள் எழவேண்டிவந்தது.

அதாவது தோல்வியுறும் இராணுவம் யாவற்றிற்கும் பொறுப்பேற்க வேண்டி வருவது தவிர்க்க முடியாதது, வெற்றியைத் தமதாக்கும் அரசியல்வாதிகளும், இராணுவத்தின் உயர்மட்டத் தலைமையும் தோல்வியையும், பழிகளையும் இராணுவத்தின் மீதும், கீழ் மட்ட அதிகாரிகளிடத்திலும் சுமத்தி விடுவது வழமையாகும். இதனை இவ் அமைப்பு முறையில் மாற்றிவிட முடியாது. இதே வேளை அரசியல்வாதிகளுக்கு கருவியாகத்துணை போகும்இராணுவத்தினருமதனைஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் அதாவது ஏவலைச் செய்யாத பணியாள் அதற்கான பொறுப்பையும் தண்டனையையும் அனுபவித்தேதான் ஆகவேண்டும்.

# பதவி ஏற்காதோரின் நியமனங்கள் ரத்து

01.06 93வரை தமது நியமனத்தை பொறுப்பேற்காத ஆசிரியர்களின் நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளரும் கல்விச் சேவைக் குழுத் தலைவருமாகிய ஏ. எஸ். வீரரத்ன சகல மாகாண, மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

1993-ம் ஆண்டிலிருந்து புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் உட்பட சகல வகை ஆசிரியர்களையும் இது உள்ளடக்கும் எனவும், விசேட காரணங்களினால் இவ்வாறு இவர்கள் கடமையேற்காவிட்டால் அதன் விபரங்களை தமக்கு உடன் தெரிவிக்குமாறும் இவர் மேலும் பணித்துள்ளர்.

(17)

## செயலமர்வு

யா/மல்லாகம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் கணிதபாட விசேட செயலமர்வு இடம்பெற்றது. மல்லாகம் கொத்தணி அதிபர் ஆ. கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்விற்கு கணித விஞ்ஞான மூலவள நிலையம் ஊக்கமளித்திருந்ததும், இதுவே யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற கணித பாடத்திற்கான முதலாவது செயலமர்வு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

... இங்கு கிடைக்கின்ற மூல வளங்களைக் கொண்டு எமக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்வதன் மூலம் உடைத்தெறியலாம் என்ற நம்பிக்கை உணர்வை மக்கள் மத்தியில் வலுவடையச் செய்யக் கூடியவாறான காட்சிகளைக் கொண்ட கண்காட்சி ஒன்றினை நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் நடாத்தி வருகிறது.

இக்கண்காட்சி நிகழ்வானது நாம் கையாள வேண்டிய புதிய யுக்திகளை விவசாயம் ...

... திக்குழு கைத்தொழில், பனை தென்னை வளம், உணவு பதனிடல் என பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு புள்ளி விபரத் தரவுகளுடனும் படங்களுடனும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் விளக்கமளிக்கும் நோக்குடன் தொலைக்காட்சி மூலம் குறும்படங்களும் காட்டப்பட்டு வருகின்றன.

பழநி, ராணிப்பேட்டை

# தேர்தல்களை நடத்தும்படி தேர்தல் ஆணையகத்தைப் பணிக்கவும்

## உயர்நீதிமன்றில் தமிழக அரசு மனு

[சென்னை]

பழநி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலையும், ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலையும் நடத்துமாறு தேர்தல் ஆணையகத்திற்கு உத்தரவிடுமாறு கோரும் மனுவொன்றை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளார். தமிழக அரசின் இந்த மனு தாக்கல் செய்யப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் தேர்தல்களை நடத்துவது என்று தேர்தல் ஆணையகம் விடுத்த அறிவிப்பையும் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

விமானத் தாக்குதல் நடக்கும்?

# சேர்பியாவிற்கு அமெரிக்கா இறுதி எச்சரிக்கை

(வாஷிங்டன்)

சேர்பியா தனது தாக்குதல்களை கைவிடாது போனால் விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்படுமென அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை செய்துள்ளது.

பொஸ்னியத் தலைநகரமான சரஜெவோ மீதான தாக்குதல் நடவடிக்கைகளை சேர்பியா கைவிடாது போனால் சேர்பிய இராணுவ இலக்குகள் மீது நேட்டோ விமானங்கள் தாக்குதல்களை மேற்கொள்ளும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை செய்துள்ளார்.

# மொகாதிசு விமான நிலையம் ஐ.நா.படை கட்டுப்பாட்டில்?

(மொகாதிசு)

மொகாதிசு நகரில் இருக்கும் விமானத்தளங்கள் யாவற்றையும் சோமாலியாவில் இருக்கும் ஐ நா. படைகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளன.

இந்த விமானத்தளங்களின் ஊடாக சோமாலியாவின் கிளர்ச்சிக் குழுவினருக்குத் தேவைப்படும் ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருள்கள் கடத்தப்படுவதாகவும் இவ்விமான நிலையத்தின் சுங்க வரிகள் அறவிடுவதன் மூலம் கிளர்ச்சிப் படையினர் வருவாய்ஈட்டி வருவதாகவும் ஐ. நா. படையினர் கூறியுள்ளனர்.

எனவேதான் இந்த விமான நிலையங்களை ஐ. நா. படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது அவசியமாகியது என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

**தமிழீழமெங்கும் தரிசின்றி பயிர் செய்வோம்**

படகினுள் கிற்குள் வந்து சேர்ந்தவண்ணமிருந்தது.

### படகில் நீர் நிரம்பியது

நடுக்கடலில் வந்தவுடன் கடல் நீர் எமது படகில் நிரம்பியது அப்போது எமது படகு கவிழப்போகிறது என்பதை உணர்ந்துகொண்டோம் அப்போது படகு ஓட்டி நீங்கள் உயிருடன் போய்ச்சேரவேண்டுமானால் தண்ணீரை வெளியேற்றுங்கள் என்றார். ஆனால் அதற்குரிய பாத்திரங்கள் எதுவும் இருக்கவில்லை. பயத்தினால் நடுங்கிய நாங்கள் எங்களைக் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று அலறினோம். அதன்போது வேறு படகுகள் எம்மைத் தாண்டிச் சென்றபோதிலும் காப்பாற்ற முன்வரவில்லை.

### படகு கவிழ்ந்தது

எமது படகு கவிழ்ந்தது அதற்குள் இருந்த பலரும் நீரில் மூழ்கியதோடு பயணிகளின்பொதிகளும் கடலுக்குள் மூழ்கின. அப்போது நாங்கள் எமது கைகளையும் கால்களையும் அடித்துக்கொண்டிருந்த வேளையில் புகையிலைஏற்றிய படகோட்டி ஒருவர் மூலம் நானும் வேறு சிலரும் மீட்கப்பட்டோம். அவ்வோட்டி மேலும் சிலரை மீட்டு மீண்டும் எங்களை கிளாலிக் கரைக்கு எடுத்து வந்தார். சிலரை அவரால் மீட்கமுடியவில்லை கடலில் மூழ்கிய போது எரிபொருள் கலந்த கடல்நீர் அனைவரது உடலிலும் சேர்ந்துகொண்டதால் எல்லோரும் மயக்கமடைந்து வாந்தியெடுத்தனர்.

ஒருவாறு மயக்கம் தெளிந்த பின்னர் வீட்டுக்கு வரமுடிந்தது நான் மீண்டும் ஒரு பிறப்பு எடுத்திருக்கின்றேன் என்றே நம்புகிறேன். எனது எதிர்கால வாழ்க்கைக்கு உதவக் கூடிய பல முக்கிய ஆவணங்களை நான் கடலில் இழந்து விட்டேன். எனது கைப்பையில் இருந்த அடையாள அட்டையும், பல்கலைக் கழகத்திலிருந்து கிடைத்த கடிதமுமே எனக்கு மிஞ்சியது என்றார்.

இதே படகில் பயணம் செய்து தப்பிவந்த தாழையடியைச் சேர்ந்த செல்வி எஸ். அமுதினி எமது தென்மராட்சி செய்தியாளருக்கு தெரிவிக்கையில்;

### படகின் ஓரத்தை பிடித்தவாறு மிதந்தோம்

"நானும் எனது நண்பி பா. தமயந்தியும் அவரது தாயாரும் ஒருமித்து அப்படகில் பயணம் செய்தோம். பலத்த காற்றின் காரணமாக நீர்படகினுள் ஏறி படகு கவிழ்ந்ததும நாம் தூக்கி வீசப்பட்டோம்.

பலர் படகினுள் அகப்பட்டுவிட்டனர். நான் கவிழ்ந்த படகின் ஓரத்தை இறுகப் பிடித்துக் கொண்டு நின்றேன். மேலும் சிலரும் அப்படகின் ஓரத்தைப் பிடித்தபடி நின்றனர்.

அப்போது அவ் வழியால் சென்ற படகொன்று எம்மை ஏற்றி அல்லிப்பளைக்குக் கொண்டு வந்து சேர்ந்தது. எனது சிநேகிதி விபத்தில் இறந்துவிட்டதாக பின்னர் அறிந்தேன்" என்றார். மேலும் தாழையடியைச் சேர்ந்த செல்வன் ரெஸ் என்பவரும் தப்பிவந்துள்ளார்.

(யோ 86)

### நீரால்

நீர் படகின் உள்ளே வந்தது. படகு அங்கும் இங்கும் ஊசலாடத் தொடங்கியது

படகு திசை எதுவென்றில்லாமல் தள்ளாடத் தொடங்கியபோது உள்ளே உள்ள நீரை இறைக்க முடியாமல் பயணிகள் அனைவரும் பீதியடைந்து விட்டனர்.

### பேரலை ஒன்று படகை மூடியது

இந்தச் சமயம், பேரலை ஒன்று வந்து எமது படகை மூடிக் கொண்டது. அடுத்த நிமிடம் படகு கவிழ்ந்தது நான் படகின் ஓரமாக இருந்த காரணத்தினாலும் எனக்கு நீச்சலடிக்கத் தெரியும் என்ற காரணத்தினாலும் கடலினுள் பாய்ந்தேன்.

கடல் நீரில்மூழ்கி நீச்சலடித்து சிலயார் தூரத்திலிருந்து பார்த்தபோது கவிழ்ந்த படகிற்குள் பலர்சிக்குண்டது தெரிந்தது. நானும், என்னைப் போல தப்பிய மூவரும் கவிழ்ந்த படகை பிடித்துக்கொண்டோம்.

படகில் கைபிடித்து இருக்க முடியா வண்ணம் அலை எம் மீது மோதியது கடலினுள் குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என பலர் மூச்சுத்திணறி இறந்துவிட்டனர். என் மனைவியும் என்னோடுதான் வந்தார் அவரும் இறந்து விட்டார்

### படகைப் பிடித்தபடி சத்தமிட்டோம

பின்னர் கவிழ்ந்திருந்த படகிலிருந்தபடி நாம சத்தமிட்ட வண்ணம் இருந்தோம் சுமார் ஒரு மணித்தியாலம் இவ்வாறு தவித்துக்கொண்டு இருந்திருப்போம் எமது படகிற்கருகால் சென்ற வேறு ஒரு படகுக்காரர் எம்மை மீட்டு தமது படகுடன் ஆலங்கேணி கரையில் கொண்டு சென்று விட்டார். எனது மனைவி மூழ்கிப்போன துயரத்தை தாங்க முடியாமல் நான் பின்னர், கிளாலியை நோக்கி படகில் ஏறிவந்து கரை சேர்ந்தேன்.

இவ்வாறு அவர் வேதனையுடன் விபரித்தார்.

(தி),(பா) (86)

### பதினொரு பேர்

கரை சேர்ந்தவர்கள் கவிழ்ந்த படகைப் பிடித்துக்கொண்டிருந்து வேறுபடகுகள் மூலம் மீட்கப்பட்டனர் இவர்கள் அதிர்ச்சியடைந்தே காணப்படுகின்றனர். (தி)

## நிவாரணப்பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்கு தீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய யூலை மாத, நான்கு வார நிவாரண உலர் உணவுப் பொருள்கள் இன்று தொடக்கம் சங்க கிளைகளில் விநியோகிக்கப்படும்.

வலி-கிழக்கு (வ-ப) தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் (ம. ப.)
அச்சுவேலி.

## கணக்காளர் பதவிக்கான வெற்றிடம்

மேற்படி கணக்காளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பிக்க விரும்புவோர் 25 08.93 இற்கு முன் பொதுமுகாமையாளர் தெ. ப. பொ. உ வி. கூ சங்கம் அச்சுவேலி 10ஆம் கட்டை ஆவரங்கால், புத்தூர் என்ற முகவரிக்கு நேரிலோ பதிவுத் தபாலிலோ விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

சம்பளத்திட்டம் 104.7 — 1165 / 60x3 — 2170 / 75x11

கூட்டுறவு ஆணைக்குழுவினரால் அனுமதிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்:-**

அ. கூட்டுறவு பணியாளர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் 3 வருட கால அனுபவம் அல்லது 9ஆவது சம்பளத் திட்டத்தில் 6 வருட கால அனுபவம.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தினால் நடாத்தப் பெற்ற கணக்குப் பதிவாளர் இறுதிப் பரீட்சை சித்தியுடன் 4வருட கால மேற்பார்வை மட்டப் பதவியில் அனுபவம்.

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பயிற்சிச் சான்றிதழ் அல்லது க பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடம் கணக்கியல் உட்பட அத்துடன் மேற்பார்வை மட்டப் பதவியில் 6வருட கால அனுபவம்.

(5667) பொதுமுகாமையாளர்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



# யுத்த கைதிகளுக்கு ஆதரவாக கொழும்பில் உறவினர் போராட்டம்

(கொழும்பு)

உண்ணாவிர தமிருந்து வரும் போர்க்கைதிகளின் தென்னிலங்கையில் உள்ள உறவினர்கள் நேற்றுக்காலை கொழும்பின் மூன்று இடங்களில் வதிமறியலிலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் கொழும்புக்கோட்டை ரயில் நிலையத்தில் கூடிய போர்க்கைதிகளின் உறவினர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். கொளுத்தும் வெயிலிலும் ரயில் நிலையம் முன்பாக நின்ற இவர்கள் தமது கணவன்மார்களையும் பிள்ளைகளையும் சகோதரர்களையும் விடுவிக்க வேண்டும் என்ற சுலோக அட்டைகளை தாங்கியிருந்தனர்.

அங்கு கூடியிருந்தவர்கள் பொதுமக்களுக்கு போர்க்கைதிகள் நிலவரம் குறித்து விளக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். இதேவேளை 10 மணியளவில் பௌத்த விகாரை ஒன்றின் முன்பாகவும் கண்ணாஸ்பத்திரி சந்தியிலும் கூடிய போர்க்கைதிகளின் உறவினர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இப்பகுதியில் கடமையில் நின்ற பொலிசாரை நோக்கி இவர்கள் கோஷமிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களது இந்த ஆர்ப்பாட்டங்கள் அரசுக்கு நெருக்கடியை கொடுக்க ஆரம்பித்துள்ளதாகவும் தெற்கில் மக்களின் அனுதாபத்தை திரட்டி அரசை விரைந்து நடவடிக்கை எடுக்கச் செய்ய போர்க் கைதிகளின் உறவினர்கள் முயல்வதாகவும் இது குறித்து கருத்துத் தெரிவித்த பி. பி. ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
20-01-1975

வீரச்சாவு:
25-06-1992

வீரவேங்கை
**புகழரசன் / மதன்**
(பொன்னையா சுதர்சன்)
(கட்டைக்காடு சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)
திதி: -12-08-93

புலியாக நீ நின்று போராடினாய் - மறவர்
படையென எதிரியோடு எதிர்கொண்டாய்
தமிழீழ விடிவிற்காய் தன்னுயிரைக் கொடுத்தவனே
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஐயா.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதர,
சகோதரிகள், அத்தான்மார்,
அண்ணிமார், மருமக்கள்.

(5664)



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
13
—
10
—
1971



இறப்பு:
05
—
08
—
1991


### இரு படகுகள்

பட்டனர். இவர்களில் சிலர் ஆலங்கேணிக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இவ்விரு படகுகளினதும் ஓட்டிகள் நால்வரும் நீந்தி கரைசேர்ந்து விட்டனர்.

இதேவேளைநேற்றிரவுவரை 19 சடலங்கள் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன. இவற்றில் 14 பேருடைய சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் ஒரு குழந்தையினதும் பெண்ணினதும் சடலங்கள் மீட்கப்படவில்லை என தெரிய வருகிறது. இக்குழந்தையின் பெற்றோர் இவ்விபத்தில் மரணமடைந்து விட்டனர்.

### சகல

வழங்கப்படுகிறது. ஆனால் இவ் அதிகரிப்பு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டவர்களுக்கு வழங்கபயடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரால் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதப்படி பயிற்சி ஆசிரியர்கள் எவரால் நியமிக்கப்பட்டாலும் எல்லோருக்கும் வித்தியாசமற்ற அடிப்படையில் சகல படிகளும் வழங்கப்படுவதை உறுதிபடுத்துமாறு கேட்டுள்ளார். அத்துடன் இதனை வழங்குவதற்கு தேவையான மேலதிக கட்டுநிதியை முன் கூட்டியே தமக்கு அறியத்தந்தால் மாகாண திறைசேரி

# அம்புலன்ஸ் பழுது ஆறு நோயாளிகள் அவதி

(தென்மராட்சி)

சாவகச்சேரி மருத்துவமனையில் இருந்து அவசர சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்காக நேற்று ஆறு நோயாளர்களை ஆஸ்பத்திரி ஊழியர்கள் உடன் அனுப்புவதற்காக அம்புலன்ஸ் வண்டியை ஆயத்தம் செய்தும் அவ்வண்டி ஓட முடியாத நிலைமையில் உள்ளதால் பின்பு நோயாளிகள் தனியார் ஓட்டோக்களிலும், கார்களிலும் யாழ். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி பகுதிகளுக்கு பொதுவாக சாவகச்சேரி மருத்துவ மனைக்கு மட்டுமே ஒரு அம்புலன்ஸ் வண்டி இருந்தும், அது கூட, சீரின்மையாக இருப்பதை இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரையும் அக்கறை இல்லாமல் இருப்பதாக மக்கள் கூறிக் கொள்கின்றனர். அம்புலன்ஸ் வண்டி இன்று அவ் வண்டிக்குரிய பற்றரி இல்லாமையால் மருத்துவமனை ஊழியர்கள் சுமார் அரைமணிநேரம் தள்ளியும் அவ் வாகனத்தை இயக்க முடியாமல் இருந்தது. இது போன்று கடந்தசிலகிழமைக்கு முன்னும் இவ்வண்டி சீரின்மையால் நோயாளி ஒருவருக்கு அவசர சிகிச்சை அளிக்க உரிய நேரத்திற்கு அவ் வண்டி செல்லாமையின் பொருட்டு நோயாளி மரணமானார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. இவ் வண்டி தொடர்ந்தும் சீர் இல்லாமல் இருக்கும் பொருட்டு நோயாளிகள் பெரும் அவஸ்தைப்படவேண்டி நேரிடும் என்றும் மக்கள் கூறிக் கொள்கின்றனர். (86)

# அம்பனை, இயக்கச்சியில் காவலரண்கள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அம்பனைப்பகுதியில் உள்ள இராணுவத்தினரின் காவரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். செவ்வாயன்று இரவு 7 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

அதேதினம் இரவு 10.30 மணியளவில் இயக்கச்சி பகுதி காவலரண் ஒன்றின் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.


உ

## பிறந்த நாள் வாழ்த்து
12-08-93





## கப்டன் சுபாஸ்கர்

[சோமசுந்தரம் சக்திவேல்]

பிறப்பு: 1965. 04. 05 — வீரச்சாவு: 1992. 08. 12

நெஞ்சறையில் நீ புரியும் சத்தமில்லா யுத்தத்தில்
வெண்டுண்ட இதயத்தில் செந்நீர் வழிந்தோடி,
தஞ்சமெனக் செஞ்சிவந்து கண்ணில் குடியேற
கையில் மலரள்ளி... துயிலில்லம் தேட...
காற்றாக... மலராக... நிலவாக - தினம்
களமாடும் வீரரின் விசையாக... நீ சிரிக்க-
மலைக்கின்றோம்! எங்கே மலர் தூவ!

(இவருடன் வீரச்சாவடைந்த சக போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.)

செம்மலை,
மணலாறு.

—குடும்பத்தினர்

(5647)

## மரண அறிவித்தல்

திருமதி

### நடனசிகாமணி இரத்தினேஸ்வரி

வ. இ. நடனசிகாமணி இரத்தினேஸ்வரி கிளாலி கடலில் அகால மரணமானார். இவர் வ. இ. நடனசிகாமணியின் (மணிஅண்ணை R. V. G) அன்பு மனைவியும், மாவீரன் கப்டன் அலன் (பாக்கியலிங்கம்), காசிலிங்கம், நடராஜலிங்கம், சந்திரலிங்கம், சண்முகலிங்கம், விஜயலிங்கம், கலாராணி, செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 9 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. இ. நடனசிகாமணி
(கணவர்)

பாக்கியலிங்கம் வீதி,
வல்வெட்டித்துறை.

(5670)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதர,
சகோதரிகள், அத்தான்மார்,
அண்ணிமார், மருமக்கள்.

(5664)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 13 — 10 — 1971



இறப்பு: 05 — 08 — 1991

ஆனையிறவு ஆகாய. கடல். வெளி சமரில்
வீரச்சாவு எய்திய

### வீரவேங்கை சதீஸ்குமார்

(தாமோதரம்பிள்ளை சோமசுந்தரம் (பிரமணா))

திதி: 12-8-93

மாசாரிலே பிறந்து மாவீரரான தெய்வமே
மருத்துவத்துறை கற்று மலர்ந்த வேங்கை
உன் கல்லறையைப் பாதுகாக்க
தமிழ் எல்லைப்புறம் உரம்பெறும் நிச்சயம்.

மாசார்,
பளை.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா,
தம்பிமார், உற்றார்,
நண்பர்கள்.

(5663)

## மரண அறிவித்தல்

திரு. சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி
திருமதி மகேஸ்வரமூர்த்தி மனோராணி
செல்வி மகேஸ்வரமூர்த்தி துசிபா
செல்வி மகேஸ்வரமூர்த்தி துளசி
செல்வி மகேஸ்வரமூர்த்தி துவேதா

சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், S S. ரெக்ஸ்ரைல் 214, கொழும்பு உரிமையாளரும் ஆகிய திரு. சின்னத்துரை மகேஸ்வரமூர்த்தி, அவருடைய மனைவி ஆகிய மகேஸ்வரமூர்த்தி மனோராணி (பெற்றி) இவருடைய பிள்ளைகள் துசிபா, துளசி, துவேதா ஆகியோர் 10-08-1993 அன்று கிளாலி படகு விபத்தில் அகால மரணமடைந்துள்ளனர். திருமதி மனோராணி மகேஸ்வரமூர்த்தி இளைப்பாறிய ஆசிரியர் திரு. திருமதி சி. வி. பொன்னையாவின் அருமை மகளும் ஆவார். இவர்களது ஈமக்கிரியைகள் இன்று [12-08 93] வியாழக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் கச்சாய்வீதி, சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மிட்லண்ட் வீடியோ,
கச்சாய்வீதி,
சாவகச்சேரி.

ப. பாலேந்திரன்
(மைத்துனர்)

[5671]

றது. இக்குழந்தையின் பெற்றோர் இவ்விபத்தில் மரணமடைந்து விட்டனர்.

### சகல

வழங்கப்படுகிறது. ஆனால் இவ் அதிகரிப்பு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவரால் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதப்படி பயிற்சி ஆசிரியர்கள் எவரால் நியமிக்கப்பட்டாலும் எல்லோருக்கும் வித்தியாசமற்ற அடிப்படையில் சகல படிகளும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு கேட்டுள்ளார். அத்துடன் இதனை வழங்குவதற்கு தேவையான மேலதிக கட்டுநிதியை முன்கூட்டியே தமக்கு அறியத்தந்தால் மாகாண திறைசேரி மூலம் மேலதிக நிதியை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதே போன்று சகல பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கும் எவ்வித வித்தியாசமுமின்றி 01-01-92 முதல் சேமிப்புக் கணக்கில் மாதம் ரூபா நூறு இவர்கள் பெயரில் வைப்புச் செய்ய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இவர் பணித்துள்ளார். (17)

### படகுவிபத்தில்

ரணை அதிகாரி கனகரட்ணம் கேசவனும், பிரேத பரிசோதனையை சட்டவைத்திய அதிகாரி டாக்டர் கிருஷ்ணதாஸ் ஆகியோர் மேற்கொண்டனர்.

இதேவேளை மேற்படி சம்பவத்தின்போது படகில் பயணம் செய்த மோதினால் நேருவின் பாலகன் மற்றும் அதிரூபசிங்கம் இளவேணி (வயது23) வல்வெட்டித்துறை ஆகியோரும் பலியானதாக தெரிவிக்கப்படுகின்றபோதிலும் இவ் இருவரது சடலங்களும் இதுவரை மீட்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி

வேண்டும்.

''ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு ஆதரவு அளித்து நாட்டின் எதிர்காலச் சுபிட்சத்துக்காகவும் செயல்பட வேண்டும்'' என்றார்.

### இம்மாத

வர் தெரிவித்தார்.

இதேவேளை தற்போதைய இராஜாங்க அமைச்சர் ஒருவர் தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டு கனடாவிற்கான இலங்கை தூதுவராக செல்ல இருக்கிறார். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கட்சியினர் ஐ. தே. கவுடன் இணைந்து எம். பிகளாவதற்கு வசதியாகவே இரு எம். பிகள் இராஜினாமா செய்வதாக கூறப்படுகிறது.



## செல்வன் சிவமூர்த்தி கலைவாசன்

சிவமூர்த்தி-மஞ்சுளாரஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கலைவாசன் இன்று (12-08-93) தனது முதலாவது பிறந்த தினத்தை அச்சுவேலியில் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, பெரியம்மா, அத்தைமார், மாமன்மார், அன்ரிமார், சித்தப்பாமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியக்கா, சின்னக்கா, அண்ணன்மார், மற்றும் பிரான்சில் வசிக்கும் சிவா அண்ணா, சதீஸ் அண்ணா, இராஜகுமார் அண்ணா, புஸ்பராசாமாமா, லதா அத்தை, வடிவேல் மாமா, சிவமனா அத்தை, சுவிஸில் வசிக்கும் சந்திரமோகன் அத்தான், சுரேஷ்குமார் அத்தான், கொலண்டில் வசிக்கும் உதயகுமார் அத்தான், கிரிஷ்ணகுமார் அத்தான் மற்றும் உற்றார், உறவினர்கள் இவரை முருகன் அருளால் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வீடியோ கலாமினி
S.M.T இல்லம்,
அச்சுவேலி.

(5661)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா சுந்தரலிங்கம்
### திருமதி கமலாதேவி ராகவன்

நெல்லியடியைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சுந்தரலிங்கம், திருமதி கமலாதேவி இராகவன் ஆகிய இரு சகோதரிகளும் 10. 08. 93 இல் கிளாலி படகுவிபத்தில் அகால மரணமானார்கள். இவர்கள் திரு. சு. வாமதேவனின் (கூட்டுறவுப் பரிசோதகர்) அன்புத் தாயாரும், சிறிய தாயாரும் ஜெயக்குமாரியின் (ஆசிரியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) மாமிமாரும் ஆவார்.

இவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (12-08-1993) வியாழக்கிழமை பி.ப. 2மணிக்கு நெல்லியடி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சு. வாமதேவன்
(மகன்)

(சி-7183)